புதுச்சேரி அரசு
இந்து சமய நிறுவனங்கள் துறை
ஸ்ரீ தர்பாரண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம்,
திருநள்ளாறு.

நெ. நிஅ(கோ)/ஸ்ரீததே/திருநள்ளாறு/பி1/2025-26/155 தேதி: 21.04.2025

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ள தேரோட்ட விழாவினை முன்னிட்டு ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சுப்ரமணியர், ஸ்ரீ சண்டிகேஸ்வரர், ஸ்ரீ தியாகராஜர் மற்றும் ஸ்ரீ அம்பாள் ஆகிய ஐந்து தேர்கள் கட்டுமானத்திற்கு சவுக்கு மரங்கள் சப்ளை செய்யவும், விழா முடிந்தவுடன் சவுக்கு மரங்களை எடுத்துக்கொள்ளவும் கீழே குறிப்பிட்டுள்ள இரண்டு வேலைகளையும் செய்து கொடுக்க தகுதியுடைய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இத்தேவஸ்தான நிர்வாக அதிகாரி அவர்களால் முடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

(i) ஒப்பந்தப்புள்ளி கொடுக்க கடைசி தேதி மற்றும் நேரம் : 05.05.2025 மாலை 3.30 மணி
(ii) ஒப்பந்தப்புள்ளி பிரிக்கப்படும் நேரம் : 05.05.2025 மாலை 4.00 மணி
(iii) டேவணித் தொகை (2 வேலைகளுக்கும் சேர்த்து) :ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)

கீழ்கண்ட வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

| வேலை எண் | வேலையின் விபரம் | உத்தேச எடை | அலகு | ஒப்பந்தத் தொகை (ரூபாயில்) | | கூடுதல் தொகை |
|---|---|---|---|---|---|---|
| | | | | எண்ணில் | எழுத்தில் | |
| 1 | தேரோட்ட விழாவினை முன்னிட்டு ஐந்து தேர்கள் மற்றும் சப்பரங்கள் கட்டுமானத்திற்கு சவுக்கு மரம் சப்ளை செய்ய (தேவைப்படும் அளவுகள் 12", 9", 6" சுற்றளவு கொண்டதாக இருத்தல் வேண்டும்) | 33000.00 கிலோ | ஒரு கிலோ | | | |
| 2 | தேரோட்ட விழா நிறைவடைந்தவுடன் தேர்கள் மற்றும் சப்பரங்களிலிருந்து பிரிக்கப்பட்ட சவுக்கு மரங்களை திரும்ப எடுத்துக்கொள்ள (சவுக்கு மரம் மற்றும் அதன் துண்டுகள் உட்பட) | 30000.00 கிலோ | ஒரு கிலோ | | | |

**ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்:**

1. ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்கும் போது மேற்கண்ட இரண்டு வேலைகளுக்கும் சேர்த்து டேவணித் தொகையாக ரூ. 10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் "நிர்வாக அதிகாரி, ஸ்ரீ தர்பாரண்யேஸ்வரசுவாமி தேவஸ்தானம், திருநள்ளாறு" என்ற பெயரில் பெறப்பட்ட வரைவோலையாக ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டும். டேவணித் தொகை இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

2. சவுக்குமரம் அனைத்தும் (வேலை எண் - 1) இத்தேவஸ்தான நிர்வாகத்தினரால் பணி ஆணை வழங்கிய தினத்திலிருந்து 7 (ஏழு) தினங்களுக்குள் முழுவதும் சப்ளை செய்யப்பட வேண்டும். சவுக்குமரம் அளவுகள் (சுற்றளவு) விபரம் பணி ஆணையில் குறிப்பிடப்படும். இப்பணிக்காக முன்பணம் எதுவும் வழங்கப்படமாட்டாது.
3. ஒப்பந்ததாரர் தனது சொந்த பொறுப்பில் சவுக்குமரங்களை எடை மேடையில், தேவஸ்தான பிரதிநிதி முன்னிலையில் எடை போட்ட பிறகு தேவஸ்தான வளாகத்தில் சப்ளை செய்யப்பட வேண்டும். முழுமையாக சப்ளை செய்யப்பட்ட உடன் எடையை கணக்கிட்டு பணம் பட்டுவாடா செய்யப்படும்.
4. வேலை எண் - 2 ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு, சவுக்குமரங்களை ஒப்பந்ததாரர் தனது சொந்த பொறுப்பில் எடை மேடைக்கு எடுத்துச்சென்று எடைபோட்டு எடைக்குரிய பணத்தை தேவஸ்தானத்தில் செலுத்திய பிறகே சவுக்குமரங்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவர்.
5. மேற்கண்ட வேலை எண் - 1 ஐ பொறுத்தவரை, குறைந்தபட்ச தொகை கோரியவருக்கே பணி ஆணை வழங்கப்படும். அவ்வாறே வேலை எண் - 2 ஐ பொறுத்தவரை, அதிகபட்ச தொகை கோரியவருக்கே பணி ஆணை வழங்கப்படும்.
6. மேற்கண்ட பணியினை திருப்திகரமாக, குறிப்பிட்ட காலகெடுவிற்குள் பூர்த்திசெய்யாத ஒப்பந்ததாரரின் டேவணித் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது.
7. மேற்படி வேலையினால் ஏற்படும் சேதாரங்களுக்கும், பின் விளைவுகளுக்கும் தேவஸ்தானம் எந்த விதத்திலும் பொறுப்பேற்காது.
8. சரக்கு மற்றும் சேவை வரியாக 2%, ஒப்பந்தத்தொகையில் பிடித்தம் செய்யப்படும்.
9. ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கிய பிறகு மேற்கூறிய உத்தேச மொத்த அளவில் 30% கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ சவுக்குமரங்களை சப்ளை செய்யச் சொல்லவும்/ திரும்ப எடுத்துகொள்ள சொல்லவும் தேவஸ்தான நிர்வாகத்திற்கு முழு உரிமையுண்டு.
10. மேற்படி ஒப்பந்தப்புள்ளியை எவ்வித காரணமும் இன்றி ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாக அதிகாரி அவர்களுக்கு முழு உரிமையுண்டு. ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக நிர்வாக அதிகாரியின் முடிவே இறுதியானது.

நிர்வாக அதிகாரி

<u>அலுவலக தகவல் பலகை:</u>

1. மாவட்ட ஆட்சியர், காரைக்கால் மற்றும் தனி அதிகாரி, ஸ்ரீதசுதே, திருநள்ளாறு.
2. கண்காணிப்புப் பொறியாளர். (வட்டம் - III), பொதுப்பணித்துறை, காரைக்கால்.
3. நிர்வாகப்பொறியாளர் (கட்டிடங்கள் & சாலைப் பிரிவு), பொதுப்பணித்துறை, காரைக்கால்.
4. செயற்பொறியாளர், (நீர்பாசனம் & பொது சுகாதாரம்), பொதுப்பணித்துறை, காரைக்கால்.
5. உதவிப்பொறியாளர் (பிளானிங்), (வட்டம் - III), பொதுப்பணித்துறை, காரைக்கால்.
6. ஆணையர், நகராட்சி, காரைக்கால்.
7. ஆணையர், கொம்யூன் பஞ்சாயத்து, திருநள்ளாறு/ நெடுங்காடு/ கோட்டுச்சேரி/ நிரவி/ திருமலைராயன்பட்டினம்.
8. அருள்மிகு பத்ரகாளியம்மன் தேவஸ்தானம், அம்பகரத்தூர்.
9. தேவஸ்தான வலைதளம்
10. ஆலய தகவல் பலகை.
11. நகல் பிரதி.